## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

இரண்டாம் வருட/ முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு 2013/2014

(மார்ச்/ஏப்ரல் 2016)

# TLS 2133 தமிழில் பெண்கள் இலக்கியம்
# Women's Writings in Tamil

நேரம்: 03 மணித்தியாலங்கள்

**பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.**

**எழுத்துத் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.**

---

01) அ) பால் (SEX), பால்நிலை (GENDER) ஆகிய இரு பதங்கள் தரும் பொருளை விளக்குக. (10 புள்ளிகள்)

ஆ) பெண்கள் இலக்கியம் கற்போர் மேற்கூறிய 'பால்நிலை' என்ற கருத்துருவம் (concept) பற்றி அறிய வேண்டிய அவசியம் யாது? விளக்குக. (15 புள்ளிகள்)

02. அ) 'பெண்கள் இலக்கியம்' என்ற கருத்துருவம் தோன்றிய அரசியல் சமூக பண்பாட்டுப் பின்னணியை விளக்குக. (10 புள்ளிகள்)

ஆ) தற்காலத் தமிழ் இலக்கியச் சொல்லாடல்களில் (Discourse) அது எவ்வகையில் கையாளப்பட்டுள்ளது என ஆராய்க. (15 புள்ளிகள்)

03. சங்ககாலப் பெண்பாற் புலவர்கள் பெண்கள் என்ற வகையில் தமது அனுபவங்களை தமது பாடல்களினூடாக வெளிப்படுத்தியிருக்குமாற்றைத் தெளிவுபடுத்துக. (25 புள்ளிகள்)

04. "பெண்கள் சமூக நோக்கற்றவர்கள் என்ற குற்றச்சாட்டுக்கு மாறாக விஜயநகர நாயக்கர் காலத்து பெண்பாற் புலவர்கள் தமது சமகால சமூகப் பிரச்சினைகளிலும் கவனஞ் செலுத்தியுள்ளனர்" இக் கூற்றின் பொருத்தப்பாட்டினை அவர்களின் பாடல்களை ஆதாரமாகக் கொண்டு மதிப்பிடுக. (25 புள்ளிகள்)

05. ராஜம் கிருஷ்ணனின் நாவல்கள் பல்வேறு சமூகநிலைகளிலும் வாழும் பெண்களின் பிரச்சினைகளை எடுத்துக் கூறுவனவாய் அமைந்திருக்குமாற்றை உதாரணங்களுடன் எடுத்து விளக்குக. (25 புள்ளிகள்)

06. 1980 களுக்குப் பிந்திய தமிழ்க் கவிதைகளில் பெண்களின் உணர்வுகள் வெளிப்படுத்தப்பட்டிருக்குமாற்றை மதிப்பிடுக. (25 புள்ளிகள்)

*******************************************************